**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.270/2023**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | அசோக்குமார் (PW1) | | |
| Father's Name | சந்தானம் | Calling | |
| Village | தாதகாப்பட்டி கேட் | | |
| Taluk | சேலம் | Age | |
| District | சேலம் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10th day of February 2026** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused absent, petition filed and allowed)*

**முதல் விசாரணை:–**

நான் மேற்படி முகவரியில் வசித்து மெக்கானிக் தொழில் செய்து வருகிறேன். விபத்தில் காயம்பட்டு இறந்து போன பீமன் என் நண்பர் ஆவார். கடந்த 06.06.2023 ம் தேதி இரவு 11.00 மணிக்கு பீமன் எனக்கு போன் செய்து தான் கொச்சின் செல்வதற்காக Tanker லாரியை சேலம்- கோவை பை பாஸ் ரோட்டில் ஓட்டிச் செல்லும்போது அவிநாசியை தாண்டி அவர் 3 வது Track ல் செல்லும் போது 2 வது Track ல் சென்று கொண்டிருந்த 10 வீல் கொண்ட டாரஸ் லாரி திடீரென எவ்வித சைகையும் இல்லாமல் 3 வது Track க்கு வந்து விட்டார். இதனால் பீமன் தன்னுடைய வாகனத்தை பிரேக் போட்டு நிறுத்தும்போது முன்னர் சென்ற வாகனத்தின் மீது மோதி அவர் ஓட்டி வந்த Stering வயிற்றில் பட்டு, மொக்கை காயம் ஏற்பட்டு திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று கொண்டிருப்பதாக சொன்னார்.

அங்கு சென்று நான் அவரை பார்த்தேன். நான் சென்று பார்த்தபோது வயிறு பலத்த வலியுடன் இருப்பதாக சொன்னார். நான் அவரை விசாரித்தபோது அண்ணாமலை என்பவர் மேற்படி டாரஸ் லாரியை ஓட்டி வந்ததாகவும், சைகை செய்யாமல் தான் ஓட்டி வந்த Track ல் திடீரென வந்ததால் தான் விபத்து ஏற்பட்டதாக என்னிடம் சொன்னார். வலி அதிகமாக இருந்ததால் ஊசி போட்டதில் மயக்கமாகி விட்டார். போலீசார் வந்து

விசாரணை செய்தபோது பீமனால் பேச முடியவில்லை. அதனால் நான் அண்ணாமலையின் மீது நடவடிக்கை எடுக்கும்படி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்தது, மேலும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் (அ.சா.ஆ.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் : இல்லை**

விபத்து சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. விபத்தில் இறந்தவர் என்னுடைய நண்பன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி சரியான சைமிக்ஞை செய்து தான் வாகனத்தினை ஓட்டி உள்ளார் என்றும், பீமன் தான் தவறாக ஓட்டிச் சென்று எதிரியின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரியல்ல. பீமன் Seat Belt அணிந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>Sd–N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |